**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# *Agananooru* in Cultural Perspective

**Dr.R.Suhitha Rani**, Assistant Professor, Department of Tamil,
Manonmaniyam Sundaranar University, Tirunelveli.
**ORCiD: https://orcid.org/0000-0003-4350-0323**
**DOI: 10.5281/zenodo.6619978**

## Abstract

*Man became an agriculturalist after quitting the life of a nomad. Culture has begun in the life of man due to agriculture, dress and shelter. It came from the word* ***Cultus*** *from the French language and has been pointed out as* ***Place Tilled*** *in Middle English related to thr agricultural tradition as close to the Tamil way of life. Culture developed according to the social development of a particular group of people. Tamils are highly developed in cultural heritage. Many Tamil literary sources evince their rich heritage. Sangam literature is full of Thokai and Pattu; that evince the agam, puram and agam – puram way of life. This article brings down the cultural heritage as seen in "Nedunthokai' of Akananooru'.*

**Keywords:** Culture, Agananooru, Food, Science, Sports.

.

## References

[1] Karthikeyu Sivathambi. *Tamil Culture and Literature*. Pavai Press, Chennai-14, 1st Edition 2011.
[2] Subramanian, N. *Sangakkala Valviyal*. New Century Book House (P) Ltd, Ambattur, Chennai-98, Third Edition 2017.
[3] Seyapal IRA (UA). *Akananooru* (Volume 1, 2). New Century Book House (P) Ltd, Ambattur, Chennai-98, 1st Edition 2014.
[4] Nadarasan, T.S. *Tamilin Panpattu Veligal*. New Century Book House (P) Ltd, Ambattur, Chennai-98, 1st Edition 2006.
[5] *Thirukkural*. Moolamum Parimalagar Uraiyum. Organizational Publication, Chennai, 1982.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பண்பாட்டு நோக்கில் அகநானூறு

**முனைவர் ரெ.சுகிதா ராணி,** உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
**ORCiD: https://orcid.org/0000-0003-4350-0323**
**DOI: 10.5281/zenodo.6619978**

**ஆய்வுச்சுருக்கம்**

*நாடோடியாக வாழ்ந்த மனிதன் ஓரிடத்தில் தங்கியிருந்து நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்ய பழகினான். நிலத்தில் விளைந்த பொருட்களைக் கொண்டு உணவு, உடை, உறையுள் தேடி வாழ்ந்ததன் அடிப்படையில் பண்பாடு காலூன்றி நின்றது. எனவேதான் ஆங்கிலத்திலும்* "place tilled" *என்ற சொல்லின் அடிப்படையில் 'Culture' என்ற சொல் பிறந்தது என்று கூறுவர். மனிதன் வாழ்ந்த மண்ணின் நீர்மைக்கு ஏற்ப மனிதனின் பண்பாடும் வேர் கொண்டது. தமிழர்களும் பண்பாட்டு நெறியில் சிறந்திருந்தனர் என்பதற்கு சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. தொகையும், பாட்டுமாய் அமைந்த சங்க இலக்கியங்கள் அகம், புறம், அகமும் புறமும் என்ற பாகுபாட்டைக் கொண்டது. இவற்றுள் நெடுந்தொகை என அழைக்கப்படும் அகநானூறு வழியாக பண்பாட்டு விழுமியங்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** பண்பாடு, அகநானூறு, உணவு, அறிவியல், விளையாட்டு.

**முன்னுரை**

தமிழர்களின் பண்பாட்டு கூறுகளில் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உணவு, உடை, திருவிழாக்கள், விளையாட்டுகள், வழிபாட்டு நெறிகள், சிந்தனை நெறிகள், அறிவியல் நெறிகள் முதலானவை தலைச்சிறந்து விளங்கின. பண்பாட்டு நெறிகளை அச்சாணியாகக் கொண்டே தமிழர்களின் நடைமுறை வாழ்க்கை இயங்கியது. "பண்பெனப் படுவது பாடறிந்தொழுகல்" என நவில்கிறது கலித்தொகை. தனித்து வாழ்ந்த மனிதனை இணைத்து வைத்ததும், நான் என்ற மனநிலையிலிருந்த மனிதனை உயர்த்தியதும் பண்பாடு தான். 'பண்படுத்தல்' என்னும் சொல்லிலிருந்து 'பண்பாடு' என்ற சொல் உருவானது எனலாம். பண் என்பது பாடல் அல்லது இசை எனப் பொருள்படும். 'படு' என்பதன் நீட்டல் விகாரமே பாடு. படு என்பது செம்மைப்படுத்துவது என்னும் பொருளில் வழங்குகிறது.

ஊரடவரசந என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையானப் பொருளைத் தரும் பண்பாடு என்ற சொல் நல்வழிப்படுத்தல், பக்குவப்படுத்தல், திருத்தம்பெறுதல், திருந்துதல் என்கிற பொருளையும் தருகின்றன.

> **"மனிதனுடைய வாழ்நிலைகளில் சாராம்சமாகக் காணப்படுகிற ஒழுகலாறுகள், நடத்தைகள், நம்பிக்கைகள், விழுமியங்கள், சுற்றி இருப்பவை பற்றிய உணர்வு நிலைகள் முதலியவற்றைக் குறிப்பது பண்பாடு" என்கிறார் தி.சு.நடராசன். (தமிழின் பண்பாட்டு வெளிகள், பக்.1)**

மக்கள் வாழும் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டே பண்பாடு கட்டமைக்கப்படுகிறது. அதாவது மக்களின் திருந்திய ஒழுக்கமே பண்பாடு என வரையறுக்கப்படுகிறது.

**“பண்பாடு என்பது நமது வாழ்க்கை முறையில் ஒட்டுமொத்தமான ஒருமித்த நிலையை மிகமிகச் சாதாரண வி~யங்களிலிருந்து மிக உயர்ந்தது என்று சொல்கின்ற விஷயங்கள் வரையிலான எல்லாவற்றையும் ஒருங்குதரித்தவை”(தமிழ்ப் பண்பாடும் இலக்கியமும்,பக்.3)**

என்னும் கூற்றுக்கு இணங்க அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் பண்பாட்டின் சாராம்சம் கலந்தே காணப்படுகின்றன.

நாடோடியாக வாழ்ந்த மனிதன் ஓரிடத்தில் தங்கியிருந்து நிலத்தைப் பண்படுத்தி விவசாயம் செய்ய பழகினான். நிலத்தில் விளைந்த பொருட்களைக் கொண்டு உணவு, உடை, உறையுள் தேடி வாழ்ந்ததன் அடிப்படையில் பண்பாடு காலூன்றி நின்றது. எனவேதான் ஆங்கிலத்திலும் ஊரடவ்ரயவந என்ற சொல்லின் அடிப்படையில் ஊரடவரசந என்ற சொல் பிறந்தது என்று கூறுவர். மனிதன் வாழ்ந்த மண்ணின் நீர்மைக்கு ஏற்ப மனிதனின் பண்பாடும் வேர் கொண்டது. தமிழர்களும் பண்பாட்டு நெறியில் சிறந்திருந்தனர் என்பதற்கு சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.தொகையும், பாட்டுமாய் அமைந்த சங்க இலக்கியங்கள் அகம், புறம், அகமும் புறமும் என்ற பாகுபாட்டைக் கொண்டது. இவற்றுள் நெடுந்தொகை என அழைக்கப்படும் அகநானூறு வழியாக பண்பாட்டு விழுமியங்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

எந்தவொரு செயலைத் தொடங்கும் முன்பும் கடவுளை வணங்கி தொடங்குதல் என்பது தமிழர் பண்பாடு. சங்ககால தமிழர்கள் தெய்வ வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கைக் கொண்டிருந்தனர். மக்கள் தங்கள் வாழ்வியல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு வழிபாட்டு முறைகளை பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு எனப் பாகுபடுத்திக் கொண்டனர். தலைவிக்கு அரண் செய்யக் கூடியவன் திருமால் என்பதை அகம்;:59-வது பாடல் காட்டுகிறது. மட்டுமன்றி முருக வழிபாடு இருந்ததையும் இப்பாடல் “சூர் மருங்கு அறுத்த கூர் இலை நெடுவேல், சினம் மிகு முருகன்” எனக் குறிப்பிட்டுள்ளது. முருகனை சினமுடைய கடவுளாக வழிபட்டதை “முருகன் அன்ன சீற்றத்து கடுந்திறல்” (அகம்158:16) “முருகு உறழ் முன்பொடு பொருதுகளம் சிவப்ப” (அகம்181:6) போன்ற பாடல் அடிகள் சுட்டுகின்றன.

நான்மறை நூல்களை உலகிற்கு அருளிய மூன்று கண்களை உடைய சிவபெருமான் ஆலமுற்றம் என்னும் இடத்தில் வீற்றிருப்பவன் என்பதை ‘நான்மறை…..ஆயமுற்றம் கவின் பெறத் தைஇய’ (அகம்181:16-17) என்னும் அடிகள் உணர்த்துகின்றன. மேலும் அகம்360-வது பாடலும் சிவபெருமானின் தோற்றச் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ளது. இதிலிருந்து சிவவழிபாடு சங்ககால மக்களின் பண்பாட்டில் சிறந்திருந்தது என்பது புலனாகிறது. படைக்கல பயிற்சி பெற்ற இளையோரைப் படைக்கு அறிமுகப்படுத்தும் போது போர் தெய்வமான கொற்றவைக்கு வழிபாடு செய்ததை அகம்127-வது பாடல் எடுத்துரைக்கிறது. இவற்றிலிருந்து திருமால், முருகன், சிவன், கொற்றவை போன்ற பெருந்தெய்வ வழிபாடு பழந்தமிழர் பண்பாட்டில் கலந்திருந்ததை அறிய முடிகின்றது. இவை மட்டுமன்றி தாய்தெய்வ வழிபாடு (அகம் 345) அணங்கு வழிபாடு (அகம்7, 22,158, 207, 240) இல்உறை கடவுள் வழிபாடு (அகம் 282) பாவை வழிபாடு (அகம் 269) நடுகல் வழிபாடு (அகம்35, 67, 269) போன்ற பல சிறுதெய்வவழிபாடும் வழக்கத்தில் இருந்தது என்பதை அகநானூறு காட்டுகிறது.

சங்க தமிழர்களின் அகவாழ்க்கையானது களவில் தோன்றி கற்பில் முடிவதாகும். களவினை முடிவுக்கு கொண்டு வரும் திருமணமானது ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ சமுதாயம் ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாகும். “கணவன், மனைவி என்னும் உறவு திடீரென்று ஒருநாள் ஏற்படுவதன்று. பல பிறவிகளிலும் தொடர்ந்து வருவது, முன்னைப் பிறவியில் கணவன் மனைவியராக வாழ்ந்தவர்கள் ஊழின் வலிமையால்

மீண்டும் கூடுகின்றனர்" என்று அ.தட்சிணாமூர்த்தி குடும்ப உறவு தொடங்கும் சூழலைக் குறிப்பிடுகின்றார். இத்தகைய திருமண விழாவானது திங்கள் உரோகிணியோடு வந்து கூடும் நன்னாளில் நடைபெற்றது. வீட்டிற்குமுன் வரிசையாகக் கால்களை நட்டுக் குளிர்ந்த பெரிய பந்தலை அமைத்தனர். பந்தலின்கீழ் புதுமணலைப் பரப்பினர். மனையின்கண் விளக்கினை ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டனர். மணவிழாவில் பெருஞ்சோற்றுத் திரளை உண்பது இடைவிடாது நிகழ்ந்து கொண்டே இருந்தது. முதிய மங்கள மகளிர், தலையில் நிறைநீர் குடத்தினைச் சுமந்தவராய் கைகளில் புதிய அகன்ற மண்டை என்னும் கலத்தினை ஏந்தியவராய் திருமண சடங்குகளைச் செய்தனர் என்னும் செய்தி அகம்86-வது பாடல் வழி காணக் கிடைக்கின்றது. புள் நிமித்தம் பார்த்து மணமனையை அழகுபடுத்தி திங்களை உரோகிணி கூடிய நாளில் கடவுளை வழிபட்டு, மணத்தை அறிவிக்கும் மணமுழவுடன் பெரிய முரசம் முழங்க திருமணம் நடைபெற்றதை அகம்136-வது பாடலும் தெரிவிக்கின்றது.இன்றும் திருமண சடங்குகளில் நல்ல நாள் பார்ப்பதும், வீட்டை அலங்கரிப்பதும், பந்தல் அமைப்பதும், முரசம் முழங்குவதும், விருந்து நிகழ்ச்சி நடைபெறுவதும் பழைய பண்பாட்டின் தொடர்ச்சி என்பதை இதன்மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

திருமணம் நிறைவு பெற்ற பின்னர் இல்லற வாழ்வின் பயனாக பிள்ளைப்பேறு கிடைக்கின்றது. பிறந்த குழந்தைக்கு ஐம்படைத்தாலி அணிவித்தல் ஒரு சடங்கு முறையாகப் பின்பற்றப்படுகிறது. தீய சக்திகளிடமிருந்து குழந்தையைப் பாதுகாத்தலே இச்சடங்கின் நோக்கமாகும். தலைவனின் மகன் புலிப்பல்லால் ஆன பொன்தாலி அணிந்திருந்ததை (அகம்54) பாடலடிகளால் அறியலாம்.

இல்லறத்தைக் குறிக்கக் கூடிய 'இல்லறம்' என்னும் சொல்லாட்சி அகநானூற்றில் காணப்படவில்லை. இல்லறம் என்னும் பொருள் உணர்த்தக்கூடிய 'மனை' என்னும் சொல் பயின்று வந்துள்ளது. இதனை "மனை புறற் தருதி ஆயின் எனையதூஉம்" என்னும் (அகம்:230) பாடல் அடிகளால் அறியலாம். அன்பு பண்பாகவும், அறம் பயனாகவும் அமைவது இல்வாழ்க்கை. இத்தகைய இல்வாழ்க்கையில் விருந்தோம்பல் பண்பாடு மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. சங்க மகளிர் மாமன்னனாக இருந்தாலும் மக்களாக இருந்தாலும் இல்லம் தேடிவரும் விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்று நன்முறையில் உபசரித்தனர். தொல்காப்பியர் பெண்ணின் இலக்கணம் கூறும் போது விருந்தோம்பற் பண்பாட்டையும் சேர்த்துக் கூறுகின்றார். அதேபோன்று விருந்தோம்பல் பண்பாட்டுகென தனித்ததோர் அதிகாரம் படைத்த பொய்யாமொழிப் புலவர்

**"அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகன் அமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்" (குறள்:84)**

எனக் குறிப்பிட்டுள்ளார். தன்னை நாடிவரும் உறவினரை மலர்ந்த முகத்துடன் வரவேற்று உபசரிக்க வேண்டும். அப்போது தான் வீட்டில் செல்வம் குடிபெயரும் என்றுரைகின்றார். இச்சிறப்பு வாய்ந்த விருந்தோம்புதலையும் சுற்றம் தழுவுதலையும் வறியோர் தம் துயர் துடைத்தலையும் தலைவனும் தலைவியும் தங்களுடைய கடமையாகக் கருதினர் என்பதனை "அறம்தலைப் பிரியாது ஒழுகலும்….." (அகம்:173) என்னும் பாடல் புலப்படுத்துகின்றது.

விருந்தெதிர் கொள்ளுதலையும் உபசரித்தலையும் விரும்பிய தலைவன் பொருளீட்டி வரும் போது தலைவிக்கு விருந்தெதிர் கொள்ள துணையாக இருக்குமாறு விரைந்துத் தேரைச் செலுத்தக் கூறுவதனை அகம் 374-வது பாடல் எடுத்துரைக்கிறது. மேலும் 324, 384 போன்ற பாடல்களும் இதற்கு சான்றாக அமைந்துள்ளன. உலகப் பண்பாடுகளில் மிக உயர்ந்ததாக விளங்குவது தமிழ்ப் பண்பாடு.

காலம் மாற மாற பண்பாடு மாறுபட்டு வருகின்றது. விருந்தினர் என்றால் 'புதியவர்' எனக்கொண்டு விருந்தோம்பினர் பண்டையத் தமிழர். ஆனால் தற்போது விருந்தினர் என்றால் 'குடும்பத்தினர்' என்னும் அளவிற்குப் பண்பாடு மாறியுள்ளமையும் இங்கு கருதத்தக்கது.

'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது குறள். எனவே பொருளின் சிறப்புக் கருதி வினைமேற் கொள்ளுதல் ஆடவர் பண்பாகச் சுட்டப்பட்டது. திருமணத்துக்கு முன் வரைவுக்கு வேண்டிய பொருளுக்காக பிரிந்த தலைவன், திருமணம் என்னும் கட்டுக்குள் வந்தபின் தன் குடும்பத்தினரையும் உறவினரையும் பாதுகாக்க வினைமேற் செல்கின்றான். பொருள் இல்லையெனில் நண்பர்கள் நெருங்க மாட்டார்கள். உற்றாரின் துன்பம் பெருகும். அருகிலுள்ளோர் செல்வம் ஈட்டிவந்து வளமாக வாழ்வதைப் பார்த்துப் பொறாமை ஏற்படும் இவ்வாறு சிந்தித்த தலைவன் இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்த்து உடனே பொருளீட்ட செல்வதனை "நட்டோர் இன்மையும், கேளிர் துன்பமும்" (அகம:;279) என்னும் பாடல் உணர்த்துகின்றது. அகம் 173-வது பாடலும் இக்கருத்தை மெய்ப்பிப்பதாக அமைந்துள்ளது.

ஈதல் இன்பம் கருதிய செய்பொருளுக்காகத் தம் இல்லம் துறந்தும், தம் உறவினரைத் துன்பம் போக்கிக் காத்திடவும், சுற்றத்தார் பெருகவும், உறவினர் அல்லாதவர் உறவினர் போல் பொருந்தியிருக்கவும் காரணமான முயற்சிக்குப் பொருந்திய ஊக்கத்தோடு பொருள் ஈட்டும் ஆடவரை சமூகம் போற்றியது. எனவே பொருள் ஈட்டுதலையும் இல்லாதவருக்கு வழங்குதலையும் ஆடவர்கள் உயிரினும் மேலாகக் கருதி வினைமேற் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் எனக் கொள்ளலாம். பண்டைய தமிழ் மக்கள் பல்வேறு நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். வாழ்க்கையில் நிகழும் இன்பத் துன்பங்களுக்கு காரணம் கற்பிக்க இயலாத நிலையில் மனதில் தோன்றும் கற்பனைகளே நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன. "தமிழர் பல நம்பிக்கைகள் கொண்டிருந்தனர். பண்டைய மக்கள் பலரைப் போல பெருவாரியான மூடநம்பிக்கைகளும் கொண்டிருந்தனர்" (சங்க கால வாழ்வியல், பக்.415) என்னும் கருத்துக்கிணங்க மக்களிடம் தெளிவுபடுத்த முடியாத நம்பிக்கைகள் ஆழ்ந்து கிடந்தன. தெய்வம், சூரர மகளிர், கூற்றுவன், பேய் முதலியவை இயற்கைக்கு அப்பாற்பட்ட நம்பிக்கைகளாகவும் நிமித்தங்கள், நற்சொல் கேட்டல், இம்மை-மறுமை, சொர்க்கம்-நரகம் போன்றவைப் பொதுவான நம்பிக்கைகளாகவும் கொண்டிருந்தனர்.

தலைவன் வரவை எதிர்பார்த்திருக்கும் தலைவி நல் நிமித்தம் நோக்கிக் காத்திருத்தலும், நற்சொல் கேட்டிருத்தலும், தலைவன் வரவைப் பல்லி கூறுவதாகக் கருதும் நம்பிக்கையும் மகளிர் வாழ்வில் இருந்ததை அகநானூறு தெரிவிக்கின்றன. தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி பல்லிஒலி கேட்கும் போதெல்லாம் தெய்வத்தைத் தொழுது நல்ல சொற்களைச் சொல்வாயாக என வேண்டியதாக "பகுவாய் பல்லி படுதொறும் பரவி நல்ல கூறு எனநடுங்கி" (அகம் 289:15-16) என்னும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. என்னுடைய வருகையைக் குறித்து தலைவி, சுவரில் சுழித்த வட்டத்தை நாள்தோறும் எண்ணிச் சுவர் நனையுமாறு அழுதக் கண்ணீர் காதிலணிந்த பொற்குழை நனையுமாறு தெறித்து வீழும். இவ்வாறு வருந்தி வீழ்ந்து கிடக்கும் அவளதுத் தோளின் மெலிவினைப் போக்கும் விதமாக, நிமித்தத்தைப் போற்றித் தொழுது வாழும் தலைவியின் செவியின்கண் என்னுடைய வரவினைச் சொல்லி அறிவுறுத்துமோ எனக்கூறும் தலைவன் கூற்றிலிருந்து (அகம்: 351) பல்லி ஒலியை நல் நிமித்தமாக கருதியமைப் புலனாகிறது. பல்லி ஒலியை நல்நிமித்தமாக கொண்ட தமிழர்தம் வாழ்வில் கனவு நம்பிக்கையும் தனி மதிப்பு கொண்டு இலங்கியது. சிறப்பாகத் தலைவனும் தலைவியும் வாழும் இல்லற

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

வாழ்க்கையில் இனிய கனவுகள் தோன்றுவது (அகம்: 141) நல் நிமித்தமாகக் கொள்ளப்பட்டது.மக்களின்இத்தகைய நம்பிக்கைகளே பண்பாட்டு வளர்ச்சியின் காரணிகள் ஆகின்றன.

பண்பாடென்பது ஒரு தலைமுறையினர் சென்ற தலைமுறையினரிடம் பெற்றுக் கொண்ட வாழ்க்கை முறையாகும். சமுதாயத்திலுள்ள மக்கள் வாழ்க்கையை நடத்தும் முறையே பண்பாடாகும். சமூகத்தின் வாழ்நெறியாக வெளிப்படும் இத்தகைய பண்பாட்டைப் பாதுகாத்து வழிமுறையினரும் பேணத்தகும் அளவில் கற்பிப்பதில் அகநானூறு பெரும்பங்கு வகிக்கின்றது. தெய்வ வழிபாடு, திருமண சடங்கு, விருந்தோம்புதல், பொருளீட்டுதல், நிமித்தம் பார்த்தல், நம்பிக்கைகள் போன்றவை இன்றும் மக்களிடையே பழக்கத்தில் இருந்து வருகிறது. பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்து காட்டுகிறது.கணினி யுகமாகக் காலம் மாறினும் பண்பாடு சில மாற்றங்கள் பெற்று இன்றும் என்றும் தொடர்ந்து வரும் என்பதில் ஐயமில்லை.

**துணை நூற்பட்டியல்**

[1] கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழ் பண்பாடும் இலக்கியமும், பாவை அச்சகம், சென்னை-14, முதலாம் பதிப்பு 2011.

[2] சுப்பிரமணியன், ந., சங்ககால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை-98, மூன்றாம் பதிப்பு 2017.

[3] செயபால் இ.ரா (உ.ஆ), அகநானூறு (தொகுதி1,2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை-98, முதலாம் பதிப்பு 2014.

[4] நடராசன், தி.சு, தமிழின் பண்பாட்டு வெளிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை-98, முதலாம் பதிப்பு 2006.

[5] திருக்குறள், மூலமும் பரிமேலழகருரையும், கழக வெளியீடு, சென்னை, 1982.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.